**செய்தி வெளியீடு எண்: 308** **நாள்: 06.05.2018**

# தமிழ் வளர்ச்சித் துறை

## தமிழறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி 07.05.2018

'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் உயரிய நூலினை இயற்றிய தமிழறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் தமிழ்ப் பணியை போற்றும் வகையில் அவரின் 200 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவர் பிறந்தநாளான மேத் திங்கள் 7ஆம் நாளன்று ஆண்டுதோறும் மாலை அணிவித்து சிறப்புச் செய்யப்படும் என்று 2014ஆம் ஆண்டு மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, ஆண்டுதோறும் அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. இவ்வாண்டு அவரது 204 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வரும் 2018 மேத் திங்கள் 7ஆம் நாள், திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை காமராசர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள அவரின் திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்யும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

தமிழறிஞர் டாக்டர் கால்டுவெல் அவர்கள் 07.05.1815 இல் அயர்லாந்தில் பிறந்து, ஸ்காட்லாந்தில் கல்வி கற்று, 08.01.1838 அன்று இந்தியா வந்து 53 ஆண்டுகள் அயராது தமிழ்ப்பணி, இறைப்பணி, கல்விப்பணி மற்றும் சமூகப் பணியாற்றினார். 1891 ஆம் ஆண்டில் தமது 77 ஆவது வயதில் தமிழ்நாட்டில் கொடைக்கானலில் தன்னுயிர் நீத்தார். இவரது உடல் திருநெல்வேலி மாவட்டம் இடையன்குடியில் அவரால் எழுப்பிய தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இவர் ஸ்காட்லாந்தில் கல்வி பயின்று ஆங்கிலக் கிறித்துவ சங்கத்தைச் சார்ந்து 23 ஆவது வயதில் சமயப் பணிபுரிவதற்காகத் தமிழகம் வந்தவர், திருநெல்வேலி மாவட்டத்தில் இடையன்குடியை இருப்பிடமாகக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றினார்.

கால்டுவெல் அவர்கள் இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரு, ஜெர்மன், பிரெஞ்சு போன்ற மேலைநாட்டு மொழிகளிலும், தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற தென்னக மொழிகளிலும் சிறந்த புலமைப் பெற்றிருந்தார். இதன்மூலம் "ஆரிய இன மொழிகள் வேறு, திராவிட மொழி இனங்கள் வேறு, தமிழுக்கும் வடமொழிக்கும் எவ்வித உறவும் இல்லை, வடமொழி இன்றியே தனித்து இயங்கக் கூடியது தமிழ்" என ஒப்பிலக்கண ஆய்வின் மூலம் உலகுக்கு உணர்த்தியவர் தமிழறிஞர் கால்டுவெல் ஆவார்.

இவரது ‘திராவிட மொழிகளில் ஒப்பிலக்கண நூல்’ திராவிட மொழிகளின் மொழியியல் அடிப்படை ஆய்வுக்கு முன்னோடியாக அமைகிறது. இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய் வடமொழியே என்றிருந்த காலத்தில், ஆரியத்தினின்று தோன்றியதே தமிழ் என்ற கொள்கையை மறுத்துரைத்த பெருமை டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களையே சாரும். திராவிட மொழிகள் ஒரு தனியினம், அவற்றிற்குத் தாய், தமிழே என விளக்கி உலகுக்கு உணர்த்தி மேலும் மொழியியல் ஆராய்ச்சியில் நமக்கு வழிகாட்டிய விடிவெள்ளி இவரே. திராவிட மொழிகட்குப் புத்துயிர் அளித்தவர், டாக்டர் இராபர்ட் கால்டுவெல் ஆவார். இவரின் ஒப்பிலக்கணப் பணியைப் பாராட்டி, சென்னை பல்கலைக்கழகமும், இராயல் ஏசியாடிக் சொசைட்டியும் இவருக்கு “இலக்கிய வேந்தர்”, “வேத விற்பன்னர்” என்ற பட்டங்களை வழங்கிப் பெருமைப்படுத்தின. ‘எத்தனையோ பேர் கூடிச் செய்ய இயலா பெரும்பணியை, எத்தனையோ பிறவி எடுத்துச் செய்யும் தமிழ்த் தொண்டினை ஒரு பிறவியில் ஒருவராகவே இருந்து செய்து செந்தமிழை உலகறியச் செய்தவர் என்றால் மிகையாகாது.

அவர் பிறந்த நாளையும், அவரின் தமிழ்ப் பணியையும் நினைவு கூறும் வகையில் சென்னை காமராசர் சாலையில் (மெரினா கடற்கரையில்) அமைந்துள்ள டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் திருவுருவச் சிலைக்கு 07.05.2018 ஆம் நாளன்று காலை 10.00 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்களும், அரசு அலுவலர்களும், பொதுமக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**